தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3 | தி. பி. 2016 | சடகம் 23 | (11-8-1985) | 65 காசுகள் | [இதழ் எண்: 62] | பகுதி –28-30

திம்புப்பேச்சு வழியாக, செயவர்த்தனாவின் மேலுள்ள அரத்தக் கறைகளைத் துடைத்து, உலக நாடுகளின் கண்களுக்கு அவரை நல்லவராக்கப் பார்க்கிறார் இராசீவ் காந்தி!

தமிழீழ விடுதலைப் போராளிகள் விழிப்புணர்ச்சி பெற்று, இனியேனும் தங்களுக்குள் உள்ள பூசல்களை ஒழித்துக்கட்டுக!

தமிழீழத்தை ஒட்டுமொத்தமாகக் காக்கவேண்டுவதே, அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள தலையாய பணி!

சில்லறைக் கோரிக்கைகளைத் தலைவர்கள் கைவிடவேண்டும்!

திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்தாலன்றி அவற்றிற்கு எதிர்காலம் இல்லை!

கருணாநிதி இனியும் பதவிக்கு அலைவது, அழுகிய பிணத்திற்கு உயிரூட்ட விரும்புவதே ஆகும்!

சாதிகளின் பெயரால் தமிழின ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சி வருந்தத் தகுந்தது!

சாதிச் சலுகைகளுக்காகப் போராடுவது தமிழினத்தை நிலையான அடிமைக்குள்ளாக்கும்!

தமிழர்களின் ஒரே போராட்டம் தமிழீழம் அல்லது ‘தமிழ்நாட்டு’ப் போராட்டமே!

பாவலரேறுவின் தெளிவான முன்னறிவுப்புரை!

‘தமிழீழக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்காது’ என்று இராசீவ் காந்தி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்ட பின், இன்னும் திம்புப்பேச்சில் நம்பிக்கைக் கொள்வது, வீணான வெறும் வம்புப் பேச்சாகவே முடியும். இராசீவ் காந்தி ஒரு பசுத் தோல்போர்த்திய புலி! செய்வர்த்தனாவோ புலித் தோல் போர்த்திய ஓநாய்! இவர்கள் இருவரையும் தமிழர்களோ, விடுதலைப் போராளிகளோ இன்னமும் நம்பிக் கொண்டிருப்பது, வறண்ட பாறையில் நீரூற்றுக்காகக் காத்துக் கொண்டிருப்பதைப் போன்றதே! எனவே, தமிழீழ இளைஞர்கள் தங்களுக்குள் விழிப்புணர்ச்சி பெற்றுத் தாங்கள் ஒன்றிணைந்தால் தவிர, வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்டு, தங்களுக்குள் உள்ள உட்பூசல்களைக் களைந்து ஒரே குழுவாக முழு மூச்சுடன் சிங்கள வெறியர்களை எதிர்த்துப் போராடுவதே தங்கள் விர்க்க வொண்ணா உயிர்க்கடமை என்று முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

திம்புப் பேச்சு வழியாகவோ, அல்லது வேறு தில்லுமுல்லான நடவடிக்கைகளாலோ, செயவர்த்தனாவின் மேல் உள்ள அரத்தக் கறைகளையும், கொலைப் பழிகளையும், இன அழிப்பு வேக்காளத்தையும் துடைத்துவிட்டு, அல்லது மூடி மறைத்துவிட்டு, உலக நாடுகளின் கண்களுக்கு, அவரை ஒரு புனித புத்தனாகவும், அமைவிணக்க ஒப்புரவாளனாகவும் (சமாதானப் பிரியனாகவும்), மிகவும் நல்லவனாகவும் ஆக்கவேண்டும் என்று முயற்சிசெய்யப் பார்க்கிறார், இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி. இந்தத் தகிடுதத்த, தந்திர மந்திரங்களையும், ஏமாற்று எகத்தாளங்களையும் நம்மவர்கள் குறிப்பாக நம் இளைஞர்கள் சரியாக விளங்கிக்கொள்ளவில்லையே என்பதுதான் நம் கவலை.

‘ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே செய்க’ என்பதற்கிணங்க தமிழினத்தின முன்னேற்றத்தின ஒட்டுமொத்தமான முயற்சி என்பது இன்றைய நிலையில் தமிழினத்திற்கென்று, தமிழீழத்திலோ, தமிழகத்திலோ ஓர் உரிமையான, முழு இறைமை வாய்ந்த அரசு அமையவேண்டும் என்பதுதான். அதிலும் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ அவ்வாறு அரசு அமைக்கும் வாய்ப்பு, தமிழீழத் தமிழர்களுக்குத்தான் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்த வாய்ப்பை எண்ணிச் சிதறலில்லாமல் நாம் அனைவரும் பயன்படுத்திக் கொண்டு முனைந்து போராடிபபெறுதல் வேண்டும் அல்லாக்கால், இவ்வினம் இன்றிருப்பதை விட, படிப்படியாக இன்னமும் வாழ்வியல் உரிமைகளை இழந்துகொண்டே போக

(தொடர்ச்சி 2-ஆம் பக்கம்)

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டியிருக்கும். அக்கால் நலிவுகளும், நசிவுகளும், அழிவுகளும், அழிம்புகளும், இன்று இவ்வினத்திற்கு இருப்பதை விட, மிகுதியான அளவில் ஏற்படும் அக்கால் நாம் மிகவும் தொல்லைகள் படவேண்டியிருக்கும். இன்று நம் கண் முன்னுகப் பலர் மடிவதைப் பார்க்கவேண்டியுள்ளது. அதைப் பார்த்து நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையென்றாலும், கூப்பாடு போடவாகிலும் வழி இருக்கிறது; நம்மால் முடிகிறது. ஆனால், நடுக்கடலில், புயலில் மாட்டிக்கொண்ட கப்பல் சிறிது சிறிதாக நீருள் முழுகுவதை வெறுமனே பார்த்துக்கொண்டு தான் இருக்க முடிவதைப்போல், எதிர்காலத்தில் நம் இனம் படிப்படியாக அழிவதையோ, அழிக்கப் படுவதையோ, நாம் வெறுமனே பார்த்துக்கொண்டு தான் இருக்கமுடியும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, தமிழீழப் போராட்டத்தை நாம் வலுப்படுத்துவதும், தமிழக விடுதலைப் போராட்டத்திற்குக் களம் அமைத்துத் திட்டமிடுவதுமே நம்மின் இன்றைய முழு முயற்சியாக இருத்தல் வேண்டும்.

இப்பொழுது நடைபெற்றுவரும் திம்புப் பேச்சு வெறும் வம்புப் பேச்சாகவே முடிவடையும். இதன் வழியாக, செயவர்த்தன மேல் உள்ள அரக்கக்கறை களைத் துடைத்தெடுப்பதும், உலக நாடுகளின் கண்களுக்கு, அவரை நல்லவராக்கிக் காட்டுவதும், தமிழீழப் போராட்டத்தை மெலிவு அடையச் செய்வதுமே இராசீவ் காந்தியின் குறிக்கோளாக இருக்கும் என்று கருதவேண்டியுள்ளது. அதனால், தமிழீழப் போராளிகள் இவ்வகையான நெகிழ்ச்சி நடவடிக்கைகளை நம்பாது, விழிப்புணர்வு பெற்று இனியேனும் தங்களுக்குள் இருக்கும் உட்பூசல்களை அறவே ஒழித்துவிட்டு ஒன்றுபட்டு, மேலும் தீவிரமாகப் போராடுவதற்கும், தமிழீழத்தை வென்றெடுப்பதற்கும் தங்களை அணியப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அதற்கிசைவாக, இப்பொழுதைய நிலையில், தமிழினத்தை ஒட்டுமொத்தமாகக் காக்க வேண்டுவதே இங்குள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள தலையாய பணி என்பதை நம் தலைவர்கள் உணர்தல் வேண்டும். மற்றபடி, சில்லறைக் கோரிக்கைகளை அவர்கள் அறவே கைவிடுதலும் வேண்டும். திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்தாலன்றி அவற்றிற்கு எதிர்காலமென ஒன்றிருக்க இயலாது.

கலைஞர் கருணாநிதி இனியும் பதவியை எண்ண வேண்டா. எண்ணினாலும் அது நடவாது. நாட்டின் சூழ்நிலை அவ்வாறு ஆகிவிட்டது. எனவே, அவர் பதவிக்காக முயற்சி செய்வது. அழுகிய பிணத்திற்கு உயிரூட்டுகின்ற முயற்சி போன்றதே ஆகும்.

இக்கால் திராவிட இயக்கம், சாதிகளின் பெயரால் அனைவரையும் ஒன்று திரட்டுவதும், சிற்சில உரிமைகளுக்கும், கோரிக்கைகளுக்கும், சலுகைகளுக்கும் போராடுவதும் மேலும் நம் முயற்சிகளைச் சிதற அடிக்கும். அந்நிலை பெரிதும் வருந்தத்தக்கதாம். இதனால், சாதிகள் மேலும் இறுகல் தன்மையைத் தான் பெறும். அவ்வாறு போராடுவதால் பெறும் சலுகைகளும், தமிழினம் ஒன்றுபட வேண்டிய கட்டாயத் தேவையைத் திசை திருப்பிவிடும். பின்னர் அதனை ஒன்றுபடுத்துவது மிகவும் கடினமாகிவிடும். பின் மேலும் மேலும் இவ்வினத்தை நிலையான அடிமைத்தனத்திற்கே கொண்டு சேர்க்கும்.

எனவே, தமிழர்களின் ஒட்டுமொத்தமான ஒரே போராட்டம், இன்றைய நிலையில், தமிழீழம் பெறுவதே! அதே சமையத்தில் தனித் தமிழ்நாட்டுப் போராட்டத்தை முன்னறிவிக்கவும் முன்னெடுத்துச் செல்வதுமே தேவை என்பதை இங்குள்ள தமிழர்கள் உறுதியாக எண்ணிக் கொள்வார்களாக!

- பெருஞ்சித்திரனார்

‘உண்மை’யே உன் விலை இவ்வளவுதானா?

‘உண்மை’யின் விலையைத் ‘தென்மொழி’, ‘சினிமிக்சு’, ‘சிலுக்கு’ போன்ற இதழ்களோடு ஒப்பிட்டு, விலையேற்ற ஒப்பந்த வேண்டுகையை நயன்மைப் படுத்திக் கொண்ட ‘உண்மை’யாளர்கள், (பார்க்க ‘உண்மை’, 15-7-85) ஏன் அதைக் ‘குமுதம்’, ‘குங்குமம்’, ‘விகடன்’ இவற்றோடெல்லாம் ஒப்பிட மறந்துபோயினர்? ‘உண்மை’யைக் ‘குமுதத்’தோடு எடை போட முடியாத-இயலாதவர்களுக்குத் ‘தென்மொழி’யைச் ‘சிலுக்கு’, ‘சினிமிக்சு’- ஏன் ‘உண்மை’யோடு மட்டும்கூட எப்படிப் பக்க ‘எடை’ போட முடிந்தது? பக்க அளவு வைத்துத்தானா தரத்தை எடை போடுவது? ‘உண்மை’ தெரிந்துக் கொண்டது அவ்வளவுதானா? இல்லை, ‘தென்மொழி’யை எவ்வாறேனும் மட்டந்தட்ட வேண்டும் என்னும் நோக்கமா? பக்கங்களை வைத்து எடைபோடுவதானால், ‘உண்மை’ போன்றவற்றைவிட, ‘இந்து’, ‘இந்தியன் எக்சுபிரசு’ ‘தினமணி’ போன்றவை இன்னும் விலைமலிவாயிற்றே! அவற்றை ஒப்பிட்டுக் காட்டவில்லை. ‘உண்மை’? அட, ‘உண்மை’யே உன் விலையே இவ்வளவுதானா?

டி. வி. எசு. (T.V.S.) புனைவு கலைகிறது!

‘டி.வி.எசு- டி. வி. சுந்தரம் ஐயங்கார் மகார் (TVS-T.V. Sundaram Iyengar & Sons) என்றால் கண்டிப்பான நிறுவனம், வெள்ளைக்காரர்கள்கூட இவர்களிடம் ‘இரவல்’ வாங்கவேண்டும். எதுவும் ‘நெறி’ப்படி நடக்கும்; டி.வி.எசு. உருவாக்கமா? நம்பி வாங்கலாம்; தரமான பொருளாக இருக்கும். அதன் சரக்குந்தா? பாதுகாப்பாகச் சேரும்; நம்பி அனுப்பலாம்’.

‘அங்குத் தொழிற்கழகத்திற்குத் தேவையே இல்லை. ஒவ்வொரு தொழிலாளியின் வீட்டிலும் முதலாளியின் படம் பூசையறையில் வைத்துப் போற்றப்படுகிறது. இஃது ஒரு தொழில் நிறுவனம் மட்டுமன்று; ஒரு ‘குடும்ப’ மாகவே வளர்ந்துவிட்டது தொழிலாளிகளுக்கு அதிகமான சம்பளம், மலிவான விலையில் உணவு; விழாக்களுக்குச் சிறப்புப் பரிசுகள்-இவ்வளவு ஏந்துகள் இருப்பதால்தான் கட்டுப்பாடாக வேலை வாங்குகிறார்கள். சிறு முணுமுணுப்புக்கூட அந் நிறுவனத்தில் பார்க்க முடியாது’.

‘இந் நிறுவனத்தின் தெய்வத் திருப்பணிகள் ஏராளம்; பள்ளிகள், மருத்துவமனைகள் போன்ற குமுகாயத் தொண்டுகள் செய்கிறது. வெள்ள உதவி, தேசியப் பாதுகாப்பு எனில் உதவியளிக்க முன்னால் நிற்கிறது. நெல்லை, முகவை, தகடூர் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்கி ஆயிரக்கணக்கானோர்க்கு வேலை வாய்ப்பளிக்கிறது.’

இப்படித்தான் டி.வி.எசு. நிறுவனங்கள்பற்றிப் பெரும்பான்மையான மக்கள் அறிந்திருக்கிறார்கள். அத்திப்பழம் பார்வைக்கு அழகாகத்தான் இருக்கும். பிட்டுப் பார்த்தால் புழுவும் பூச்சியும் நெளியும். அதன் ‘அழகு’ தெரியும். இந்தியாவில் விரல்விட்டு எண்ணக்கூடிய மிகப்பெரிய தரகு முதலாளிய அதிகார வகுப்பு நிறுவனங்களில் ஒன்று டி.வி.எசு. இந் நிறுவனம் இப்படி ஓராளுமையாக ஏற்றம் அடைந்ததற்குப் பின்னால் இதுவரை சொல்லப்படாத கொடுமையான உண்மைக்கதைகள் பலவுண்டு. உழைத்து ஓடாகிப்போன தொழிலாளர்களின் துன்பக் கதைகள் பலவுண்டு.

டி.வி.எசு. போன்ற நிறுவனங்களின் தரமான பொருட்கள்வெறும் இரும்பையும் தெய்வத்தையும் (Rubber) மட்டும் கொண்டு படைக்கப்பட்டவையல்ல. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் அரத்தமும் சதையும்கூட அதில் இருக்கிறது. டி.வி. எசி-ன் காணற்கரும் பெருமைக்குப் பின்னே கால நேரம் பார்க்காமல் கண்ணுறக்கமின்றிப் பாடுபடும் தொழிலாளிகளின் உழைப்பு மறைந்திருக்கிறது. இவர்கள் வாடிக்கையாளர்களுக்குத் தரும் பாதுகாப்புக்கும் உறுதிமொழிக்கும் பின்னால் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் உயிர், பாதுகாப்பின்றியும் வாழ்க்கை உறுதிப்பாடின்றியும் தொங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே முதலாளியத்தின் கீழ் வழக்கமாகக் காணப்படும் அறிவியல் படியான ஆளுமைக்கோ, குடியாட்சிப்படியான தொழிற்கழக உரிமைக்கோகூட இடமில்லை. காட்டு விலங்காண்டித் தனமான படுபிற்போக்கான நிலக்கிழமை அடிமை முறைதான் ஆட்சி நடத்துகிறது.

இவற்றை எதிர்க்கும் துணிவு எந்தத் தொழிலாளிக்கும் இல்லையா? அவர்களது தொழிற்கழகம் என்ன செய்கிறது? என்ற கேள்விகள் எழுவது இயல்பே. போலிப் பொதுவுடைமையர் உட்பட எந்த ஒப்போலைக் கட்சியும் அங்குத் தொழிற்கழகம் வைக்கும் துணிவின்றி இருக்கின்றனர். அவர்களில் சிலர் கையூட்டுப்பெறும் கயவர்களும்கூட. பி. இராமமூர்த்தி போன்ற போலிப் பொதுவுடைமையர் ‘அரசியல் வேறு, நட்பு வேறு’ என்று சொல்லிக் கொண்டு டி.வி.எசு. முதலாளியுடன் உறவு கொண்டாடுகின்றனர்; நன்கொடையும் பெறுகின்றனர்.

அனைத்திந்திய அளவில் புகழ்பெற்ற கருங்காலித் தொழிற் கழகமான ஐ.என்.டி.யூ.சி.தான் இங்கே உள்ள தொழிற்கழகம். இஃது இந்திரா பேராயக் கட்சியின் கழகம். இதன் தலைவர் இராமானுசம். இந்தத் தொழிலாளர்களின் இரண்டகரும் (துரோகியும்) அவரின் கைக்கூலிகளும் ‘பங்கு’ பெறும் (தொழிலாளிகளின் கட்டணத்துடன் முதலாளியிடம் பெறுவதையும் சேர்த்து) இந்தக் கொள்ளையமைப்பின் பெயர் ‘டி.வி.எசு. தொழிலாளர் சங்கம்’. இதற்கான கட்டணம் தொழிலாளிகளின் சம்பளத்திலிருந்து கட்டாயமாகப் பிடிக்கப்படுகிறது.

இந்தத் தொழிற் கழகங்களுக்குத் தலைவர்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது தொழிலாளிகளுக்கே தெரியாது. தொழிலாளர் கூட்டத்தைக் கூட்டுவார்கள். சில கருங்காலிகளை மேடையில் ஏற்றி இவர்கள்தாம் உங்கள் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிப்பார்கள். உடனே அவர்களை ஆதரிப்பவர்கள் கை தூக்கவேண்டும். கை தூக்காதவர்கள் யாராவது இருந்தால் கூட்டத்தைச் சுற்றிலும் நிற்கும் எடுபிடிகள் அவர்களைப் பார்த்துக்கொண்டு விடுவார்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு மொழியறியாத வேறு மாநிலங்களுக்கு மாற்றல் உத்தரவு அணியமாகி விடும்.

இந்தக் கழகத்தில் டி.வி.எசு. குழுமத்திலுள்ள ‘சதர்ன் ரோடுவேசு’, ‘சிங்கர் டி.வி.எசு’ நான்குனேரி சுந்தரம் நூற்பாலை’ ஆகியவையும் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. இங்கே உள்ள தொழிற் கழகங்களில் கூட்டம் கூட்டித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் சடங்குகூடக் கிடையாது. நேரடியாக ஆளுமையே தொழிற்கழகப் பொறுப்பாளர்களின் பட்டியலை வெளியிட்டுவிடும். தற்போது பெயரிலும்கூட மிகப் பொருத்தமான ‘பொம்மையா’ என்பவனை நிலையான பொதுச் செயலராக ஆளுமையே அறிவித்துள்ளது. இவனுக்கு மேலேதான் அனைத்திந்தியச் செயலர் (ஜி). இராமானுசம்.

இந்த இராமானுசம் ஆண்டுக்கு ஒருமுறை வருவார் (தொழிலாளிகளுக்கு ஏதோ கொஞ்சமும், தனக்குக் கணிசமாகவும் நன்னர் (போனசு) பெற்றுக் கொண்டு, முதலாளிக்கு நன்றி சொல்லிச் சில ‘பொன்மொழி’களை உதிர்ப்பார். “முதலாளி இருப்பதனால்தான் உயிர் வாழ முடிகிறது. அதனால்தான் நன்னரும் பெறமுடிகிறது’ இருந்தும் உங்களுடைய உழைப்பு போதாது! இன்னும் கடினமாக உழைத்தால்தான், அடுத்த ஆண்டு இதைவிட அதிகமாக நன்னர் பெறமுடியும்” என்றவாறு பல அறிவுரை’கள் தருவார்.

மொத்தத்தில், டி.வி.எசு. தொழிற்கழகத்தின் எல்லா நடவடிக்கைகளையும் இக் குழுமம்தான் நடத்துகிறது. அனைத்தையும் ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போடுவதுதான் இவர்கள் வேலை. இதை எதிர்த்து முணுமுணுப்புகள் ஏதாவது தோன்றினால் அவற்றை உடனே தங்களுக்குத் தெரிவிக்கத் தொழிலாளர்கள் நடுவிலேயே கருங்காலிகளை உருவாக்கி வைத்துள்ளது இக்குழுமமே. வேலை முடிந்தவுடன் இந்தக் கருங்காலிகளும் எச்சில் இலையைப் போல வீசியெறியப்படுகின்றனர். அப்படித் தூக்கியெறியப்பட்ட கருங்காலிகளின் பெயர்ப் பட்டியில்

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம் பார்க்க)

மணப்பாறையில்

தமிழீழ விடுதலைப் போராளிகட்கு ஆதரவும், மறைந்த விடுதலைப் போராளிகட்கு நினைவஞ்சலியும்

உ. த. மு, க. அன்பர்கள் பங்கேற்றனர்!

தி.பி. 2016, கடகம் 4, 5 (19-20-7-85) காரி, ஞாயிறு ஆகிய இருநாட்களிலும், முகுந்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தோழமை இயக்கச் சார்பில், மணப்பாறையில் முகாமையான இடங்களில் ஈழத்தமிழர் அவல நிலை, விடுதலைப் புலிகள் போர்ப் பயிற்சி ஆகியன நாடாப் பதிவுப் படக்காட்சி (வீடியோ கேசட்) வழி காட்டப் பெற்றது. பொது மக்களும் அனைத்து அரசியல் கட்சி அன்பர்களும், அலுவலர்களும் மாணவர்களும் இயன்ற அளவு பொருளுதவி அளித்தனர். இந் நிகழ்விற்கு அரசியல் கட்சியினரும், வழக்குரைஞர் துரை-அழகிரி, விடுதலை - மோகன், தமிழரசன் போன்றோரும் உ.த.மு.க. அன்பர்கள் புலவர் நாவை. சிவம், மு. தமிழ்நெறியன், தாழை-இளவழகன் முதலியோரும், பெரிதும் துணை செய்தார்கள்.

இதனையடுத்து, கடகம் 10 (25 7-85) வியாழன் அன்று பிற்பகல் 5 மணியளவில், மறைந்த தமிழீழ விடுதலைப் போராளிகளான தங்கத்துரை, குட்டிமணி, செகன் முதலியோரின் இரண்டாமாண்டு நினைவாக, மணப்பாறை-தந்தை பெரியார் சிலையிலிருந்து நகரின் முகாமைத் தெருக்கள் வழியாக, ‘அமைதி ஊர்வலம்’ நடத்தப்பெற்றது. இறுதியாக, காமராசர் சிலையருகில் நினைவஞ்சலிக் கூட்டம் நிகழ்த்தப்பெற்றது. ஊர்வலத்தில், திருவாளன்மார்: வழக்குரைஞர் துரை. அழகிரி, பொ. திருமால், அமீர் பாட்சா, பொன். இளஞ்செல்வன், இராமசாமி, விடுதலை-மோகன், குணசேகரன், சேகர், சோ. பெர்னாண்டசு. உ. த. மு. க. அன்பர்கள் புலவர். நாவை. சிவம், தாழை. இளவழகன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் புலிகள் திரு. நாயல் மணிமாறன், திரு. குலேந்திரன் முதலியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விடுதலைப் புலி நாயல் மணிமாறன் அவர்கள், ஈழ நிலத்து இனமானப் போர்பற்றி உரையாற்றினார்கள். முடிவாக, நினைவு நாள் கூட்டத்தைச் சிறப்பித்த அனைவருக்கும் உ. த. மு. க. சார்பில், புலவர். நாவை. சிவம் நன்றியுரைத்தார். இவ்விரு நிகழ்ச்சிகளும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், மணப்பாறை வருகை தந்தபின் நிகழ்ந்ததால் எழுச்சியாக இருந்தது.

— செய்தி: நாவை. சிவம்.

இந்திய அரசு என்பது ஒரு பார்ப்பன - முதலாளிய அரசே!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண்: 62 (11-8-1985) பகுதி 28-30

திம்புவுக்குப் பின்னும் இலங்கையில் பேச்சு தொடருமாம்!

துபாயிலிருந்து வெளிவரும் 'வளைகுடாச் செய்திகள்' (Gulf News) என்னும் செய்தி இதழுக்கு, அண்மையில், தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி அளித்த நேருரையில், தமிழீழப்பேச்சு, திம்பு மாநாட்டுக்குப் பின்னும் இலங்கையில் தொடரும் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இக்கருத்து அதிர்ச்சியையும்-அச்சத்தையும் தருவதாக உள்ளது. இதில் ஈரண்டு கருத்துகள் தெளிவாகின்றன. அவை,

1. திம்பு நகரிலேயே இப்பேச்சு முடிவடையாது. அஃதாவது அவ்வாறு முடிவடையக் கூடாதென்றே திட்டமிட்டுப் பேச்சு நடத்தப்பெறுகிறது-என்பது.

2. திம்புவுக்குப் பின், இலங்கையிலேயே இப்பேச்சு தொடரும் என்னும் கோட்பாட்டில், போராளிகளை, இலங்கைக்கே வரச்செய்வது-என்பது.

இவற்றுள் முதல் கருத்து சரவானது. அஃதாவது பேச்சு திம்புவில் முடிவடைந்து விடக்கூடாது என்னும் கொள்கையை உள்ளடக்கியது. பேச்சு நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் கூறப்பெறும் இக்கருத்து, இலங்கை அரசுக்கு ஊக்கமளிப்பதாகவும், போராளிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும் இருக்கிறது,

இப்பொழுதைய நிலையில், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று வரும் தமிழீழச் சிக்கல்களைக் குறித்த, பேச்சுக்கான தீர்வு, திம்புவில் இரண்டே இரண்டு சுற்றுப் பேச்சில் முடிவுக்கு வந்துவிடும் என்று யாரும் எதிர்பார்ப்பது இயலாததுதான். இதை, இந்திய அரசைவிட, இலங்கை அரசைவிட, தமிழீழப் போராளிகளும் அவர்களைச் சார்ந்து நிற்கும் தமிழகத் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், அந்நிலைக்குரிய காரணம் போராளிகளிடம் இல்லை. இலங்கை அரசே அதற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது என்பதை நடுநிலை உணர்வு கொண்ட உலகப் பார்வையாளர்கள் அனைவருமே உணர்வர். ஆனால், திம்புவில் இப்பேச்சு முடிவடைந்துவிடக் கூடாதென்பதும், இரண்டு சுற்றுப் பேச்சுக்குப் பின்னும் இம்மாநாடு திம்புவில் தொடரக்கூடாது; இலங்கையில்தான் நடைபெறச் செய்ய வேண்டும் என்பதும், ஆன இரண்டாவது கருத்து, முன்னரே, இந்திய இலங்கை அரசுகள் பேசி முடிவெடுத்திருக்கக் கூடிய செய்தியாகவன்றோ தெரிகிறது. இந்த முடிவை அவை ஏன் எடுக்க வேண்டும்? தேவையானால் 3-ஆவது சுற்றுப் பேச்சையும் இங்கேயே நடத்தலாமே! இரண்டு எதிரிகளையும் ஒரு பொதுவான இடத்தில் கூடச்செய்வதுதானே முறை. அதுவும், 3 ஆவது கட்டத்திலும் இப்பேச்சு தொடரவேண்டிய தேவையிருந்தால், இருதரப்புப் பேச்சாளர்களிலும், முதல் தரத்தினரை அஃதாவது இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனாவையும், தமிழீழப் போராளிகளின் மேனிலைத் தலைவர்களையுமன்றோ நேருக்கு நேர் கலந்து பேசச் செயயவேண்டும். அதை விட்டுவிட்டு, அவர்களை இலங்கையில் போய்ப் பேச்சைத் தொடரவேண்டும் என்று முடிவெடுத்திருப்பது, எவ்வளவு பொருளற்றதும் (அபத்தமானதும்), ஏதமானதும் (ஆபத்தானதும்) ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்மைப் பொறுத்த வரையில், புண் எவ்வளவு கடுமையானதோ, மருத்துவமும் அவ்வளவு கடுமையாகவும், கவனமாகவும் நடைபெறவேண்டும் என்பதே நம் கருத்து: மேலும் புண் என்பது வெறும் புண் அன்று; புரையோடிய புண்! எனவே, அறுவை ஒன்றைத் தவிர, மேல் மருந்தென்னும் பேச்சுரைகள் இத் தீர்வுக்குப் பயன்படப் போவதில்லை என்பதைத் தொடக்கத்தில் இருந்தே கூறி வருகிறோம். எனவே, பேச்சுகள் இந்தியாவில் நடந்தாலும், இங்கிலாந்தில் நடந்தாலும் இதில் இணக்கத்துக்கு வரவேண்டிய முதல் தரப்பினர் இலங்கை அரசினரே! ஏனெனில், அவர்களே அனைத்துச் சிக்கலுக்கும் காரணமானவர்கள்; முதலானவர்களே! முதலுக்குக் காரணமானவரே, முடிவுக்கும் காரணமானவராக இருக்க முடியும். இலங்கை அரசு இதை இன்றுவரையில் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில், ஏதோ ஓர் அடிப்படையில், தமிழீழப் போராளிகளை இலங்கைக்குள் அனுப்பிவைப்பதற்கான முயற்சியாகத்தான் இக் கருத்து இருக்க முடியும். இது, ஓநாய்க் குப்பத்துள் வெள்ளாடுகளை ஒப்புரவுக்கு அனுப்புகின்ற செய்திதான்! இராசீவ் காந்தி குள்ள நரியாக இருந்து, இச் செயலைச் செய்யவேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இனி, புலிகள் பசித்தாலும் புல்லைத் தின்னமாட்டா என்பதைப் போராளிகள் மெய்ப்பிக்க வேண்டும் என்று அவர்களுக்கும்

டி. வி. எசு. புனைவு கலைகிறது!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்தவராயன், மகாலிங்கம், குப்புசாமி கன்னையா என நீண்டுகொண்டே போகும்.

தொழிலாளி வகுப்பு அரத்தம் சிந்திப்பெற்ற உரிமைகளை டி. வி. எசு. ஆளுநர் குறிப்பாக, 'சதர்ன் ரோடுவேசு', 'சிங்கர் டி.வி.எசு' 'நான்குனேரி சுந்தரம் நூற்பாலை' இவற்றில் ஒவ்வொன்றாகப் பறித்தெடுத்து வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில்தான் இருக்கிறோமா என வியந்து போகும் அளவுக்குத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக்கப் பட்டுள்ளனர்.

வேலைக்குப் புதிதாக ஆளெடுக்கும்போதே போதுமான அளவு வடிகட்டி விடுகின்றனர். அடிமை ஊழியர்கள், கருங்காலிகள், பார்ப்பனர்களைச் 'சாமி' என்று குருட்டுப் பத்தியுடன் அழைக்கும் ஆட்கள் போன்ற உணர்ச்சியற்ற மரக்கட்டைகளின் குழந்தைகள்-உறவினர்கள் அல்லது அவர்களால் பரிந்துரை செய்யப்படுபவர்களைத் தாம் வேலைக்குச் சேர்க்கின்றனர். அதுவும் தற்காலிகத் தொழிலாளியாகத்தான். எந்த வேலையானாலும் இரண்டு மாதத்திற்கு வேலை என்றுதான் ஆணை தரப்படும். இவர்களின் பழைய நடவடிக்கைகளைப் பற்றி உசாவ, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரிகளை அமர்த்தியுள்ளனர். பொருந்தியானவர் என்று தெரிந்தால் மட்டும் போதாது. இரண்டு மாதக் காலத்தில் நாள்தோறும் 14 மணி, 16 மணி நேரம் சலிப்போ, முணுமுணுப்போ, எரிச்சலோ இல்லாமல் வேலை செய்யவேண்டும். இந்தக்காலத்தில் அந்தத் தொழிலாளியின் நடை, உடை, செயல் பேச்சு, எழுத்து, நடைமுறை எல்லாம் கண்காணிக்கப்படும். இவை அனைத்திலும் தேறினாலும் எந்த வேலைக்கு ஆணை தரப்பட்டு அமர்த்தப்பட்டுள்ளாரோ அதைத்தவிர, வேறு எந்த வேலை கொடுத்தாலும் சேர்த்துச் செய்யவேண்டும்.

தொழிலாளர்கள் இந்த ஆளுமையின் கீழ் எப்படிக் கசக்கிப் பிழியப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு துறையைச் சேர்ந்த அஃதாவது ஓட்டுநர் போன்ற தொழிலாளிகளின் வேலையைப் பார்த்தே விளங்கிக் கொள்ளலாம், 'சதர்ன் ரோடுவேசின்' காலந் தவறாமைக்கும், பாதுகாப்புக்கும் காரணம் குழுமம் அன்று, தொழிலாளர்களின் மிகுதியான உழைப்புத்தான் என்பது விளங்கும்.

இங்கே ஓட்டுநர் வேலைக்குத் தேர்ச்சியில்லாமல் ஓட்டும் திறமை மட்டும் இருந்தால் போதாது. காலை 8 மணிக்குப் பணிநேரம் என்றால், 7 மணிக்கே வரவேண்டும். வண்டிகைக்குக் காற்றழுத்தம் பார்ப்பதிலிருந்து வண்டியில் ஏற்றப்பட்டிருக்கும் பொருள்களைச் சரிபார்ப்பது வரை, அனைத்து வேலைகளையும் செய்யவேண்டும். கட்டுகள் சரிந்து விழுந்தால் எடுத்து அடுக்கவேண்டும். இதுபோன்ற வேலைகள் எல்லாம் கணக்கில் சேரா: வண்டி புறப்படும் நேரமான 8 மணிக்குத்தான் வேலை துவங்கியதாகக் கணக்கு: இந்த வேலைகள் எல்லாம் ஒரு துப்புரவாளர் (உதவியாளர்) செய்ய வேண்டியவை: டி.வி. எசு. சரக்குந்துகளில் துப்புரவாளரே (கிளீனர்) இல்லை. வழியில் நடுக்காட்டில் சக்கரம் ஓட்டையாகிவிட்டால் கூட ஓட்டுநரே தனியாகத்தான் அதை மாற்றவேண்டும்.

சரக்குந்து புறப்படும் இடத்திலோ, அல்லது இறக்கும் இடத்திலோ பொருட்களைச் சரிபார்த்து ஏற்றுவதும், இறக்குவதும் ஓட்டுநரின் பொறுப்பு. அஃது ஓர் எழுத்தர் (கிளார்க்) செய்யும் வேலை ஒவ்வோரிடத்திலும் பொருள்களை ஏற்றும்போது அத் தொழிலாளிகளுக்கு உதவவேண்டும் ஏதாவது தவறி உடைந்துவிட்டால் ஓட்டுநரே பொறுப்பு. இடையில் முகவர்களில், சரக்கு அலுவலகங்களில் பொருள் ஏற்றி இறக்குவதில் தாழ்த்தத்திற்கு ஓட்டுநர்தாம் விடை சொல்லவேண்டும். இவையன்றி, ஒவ்வொரு முகவாண்மை அலுவலகத்திலும் பணம் தண்டி ஒப்படைக்கும் காசாளர் வேலை டி. வி. எசு' கூட்டத்தின் பல்வேறு நிறுவனங்களுக்கு அஞ்சல்களைக் கொண்டுசெல்லும் அஞ்சற்காரர் வேலை போன்ற பல்வேறு சில்லறை வேலைகள் வேறு

இவற்றுக்கெல்லாம் முடி வைத்தாற்போல் இன்னொரு பெரிய கொடுமை என்னவெனில் ஓட்டிச் செல்லும் சரக்குந்து தட்பவெப்ப நிலையின் காரணமாகவோ வேறு காரணத்தாலோ நேர்ச்சிக்குள்ளாகிவிட்டால் குழுமத்திலிருந்து ஆட்கள் வந்து ஓட்டுநரைப் பிடித்துக் கொண்டுபோய்க் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிடுவர்: பிணையிலிலும் எடுக்க மாட்டார்கள். எல்லாவற்றையும் ஓட்டுநரே தாம் சொந்தப் பொறுப்பில் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!

ஒரு வழியாகச் சரக்குந்தைக் கொண்டு வந்து நிறுத்தி ஒப்படைக்க வேண்டியவற்றை அலுவலகத்தின் உரிய பிரிவுகளில் ஒப்படைத்துவிட்டு மறுநாள் எத்தனை மணிக்குப் பணி என்று கேட்பதற்குப் போக்குவரத்து எழுத்தரிடம் (டையிமிங் கிளர்க்) சென்றால் அவர் இலவயமாக ஐந்து, ஆறுமணிநேரம் செய்கின்ற அளவு வேலை வைத்திருப்பார் வாழ வேண்டியுள்ளதே என்று அதைச் செய்து முடித்துவிட்டு மறுபடியும் ஏதாவது வேலை கொடுத்தால் அதையும் முடித்து விட்டு வீட்டுக்குப் போக வேண்டும்.

இந்த மிகைநேரம் (ஓவர்டைம்) வேலை தற்காலிகத் தொழிலாளி, நிலையான தொழிலாளி பல ஆண்டுகள் பணிபுரிந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் செய்யவேண்டும் சிறிது எதிர்ப்புத் தெரிவித்தாலும் மிகைநேரம் வேலைக்குச் சம்பளம் கேட்டாலும் உடனே வேறு மாநிலத்திற்கு மாற்றல்தான். ஓட்டுநர்கள் மட்டுமல்லர். டி.வி எசு நிறுவனங்களின் அனைத்துத் தொழிலாளர்களும் இப்படித்தாம் நடத்தப்படுகிறார்கள்.

கொண்டு இரண்டு மாதக் காலம் முடிந்ததும் இரண்டு நாள்கள் இடைவெளி விட்டு மீண்டும் இரண்டு மாதங்களுக்கு வேலை உத்தரவு கொடுப்பார்கள் இஃது ஒரு தொடர்கதை. நிலைப்படுத்துகிறோம் என்று ஆசை காட்டியே முடிந்தவரை கசக்கிப் பிழிந்து விட்டு, ஏதேனும் ஒரு சிறு தவறு நடந்துவிட்டால்கூட அதைக் காரணியம் காட்டி வெளியே அனுப்பி விடுவார்கள். தற்போது இந்த முறைதான் அதிகமாகக் கையாளப்படுகிறது.

வயிற்றுப்பசிக்காகத் தங்கள் உழைப்பை விற்றுப் பிழைக்கவந்த தொழிலாளிகளை ஊதிய வெறிபிடித்துச் சுரண்டிக் கொழுக்கிறது டி.வி எசு. ஆளுமை. படிக்காதவர்களும் படித்தவர்களுமாய் கோடிக்கணக்கில் வேலையில்லாத இளைஞர்கள் ஆலை வாயில்களிலும் அலுவலக வாயில்களிலும் வேலைக்காகத் தவம் கிடக்கிறார்கள். உரிமைகள் பற்றி முணு முணுத்தாலும், உடனே 'இதைவிடக் குறைந்த கூலிக்கு அதிக வேலை செய்ய ஆட்கள் காத்துக் கிடக்கிறார்கள்' என்று வேலையில்லாதோர் பட்டாளத்தைக் காட்டி மிரட்டுகிறது டி.வி.எசு. ஆளுமை!

நகர்ப்புறத் தொழிலாளிகளை மட்டுமன்றி, நாட்டுப்புறக் கூலி உழவர்களையும், சிறிய நடுத்தர வேளாண் குடிகளையும்கூட கொடுமை செய்கிறது டி.வி.எசு. மதுரை மாவட்டம் அருப்புக்கோட்டைக்கு அருகே 'பிரேக்சு இந்தியா' என்ற நிறுவனத்தைத் தொடங்குவதற்காக இவர்களுக்கு நிலம் தேவைப்பட்டது. உழவர்களிடம் ஏராளமான நிலத்தை வாங்கிக் கொண்டு ஆலை தொடங்கியவுடன் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருகிறோம் என்று உறுதிமொழி அளித்தது. ஆலை இயங்குகிறது. ஆனால் உறுதிமொழி காற்றில் பறந்து விட்டது.

'தொழில் அடிப்படையில் பின்தங்கியவை' என்று அரசால் அறிவிக்கப்பட்ட பகுதியில் ஆலையைத் தொடங்கி அரசு உதவியைப் பெறுவது. அங்கேயுள்ள ஏழை யெளிய உழவர்களை மிகக் குறைந்த கூலிக்கு வேலைவாங்குவது என்ற தனது தந்திரத்தை மிக வலக்காரமாக 'ஆயிரக் கணக்கான பின்தங்கிய பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தோம்' என்ற விளம்பரத்தால் மூடிமறைக்கிறது. மேலூரில் பஞ்சாலை! 'சிறிசக்கராடயர்சு', ஒசூரில் உள்ள சி. டி-டி. வி. எசு. (சி டி டிவிஎசு) நிறுவனம், விராலிமலையில் உள்ள கட்டுமானப் பிரிவு (பாடி பில்டிங் ஒர்க்ச)- இவையெல்லாம் இவ் வகையைச் சேர்ந்தவையே.

இத்தனைக் கீழ்மைகளையும் செய்து கொண்டே தொழிலாளிகளை ஈவிரக்கமின்றிக் கசக்கிப் பிழிந்து கொண்டே பெருந்தன்மைத்தனம் போடுகிறது - டி.வி.எசு. நிறுவனம். தெய்வத் திருப்பணிகளுக்கு வாரி வழங்குவதாக வஞ்சக நாடகம் நடத்துகிறது. சங்கர ஆச்சாரிகளுக்கு வண்டிகள் (வேன்சு) வழங்குகிறது. ஆர். எசு. எசி-ன் உறுப்பான 'விசுவ இந்து பரிசத்' இந்துமத வெறியைப் பரப்புரை செய்ய 'ஞானரதம்' கட்டிக் கொடுக்கிறது. அது போகுமிடமெல்லாம் இலவசமாகக் கன்னெய் (பெட்ரோல்) போட ஏந்து செய்து கொடுக்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை சீயர் மடப் பண்டாரத்தைக்கொண்டு பூசைகள் நடத்தி முதலாளிக்கு நல்லடிமையாக (விசுவாசமாக) இருக்கும்படி தொழிலாளிகளுக்குப் புகட்டுகிறது.

இப்படி 'ஆன்மீகத் திருப்பணி'களுடன் ஒப்போலைப் பொறுக்கிக் கட்சிகளையும் கைகளில் போட்டுக்கொள்கிறது. மருத்துவம் முடிந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய ம. கோ. இராமச்சந்திரனுக்கு நோய் நுண்மங்கள் புகாத கண்ணாடிக் கூண்டு வண்டி, அதில் ஏறியபடியே மேடைக்குச் செல்ல மேடையமைப்பு எல்லாம் செய்து கொடுத்தது. போலிப் பொதுவுடைமையர் உட்பட அனைத்துக் கட்சிகளையும் சரிக்கட்டி வைத்திருக்கிறது.

இத்தனையையும் மூடி மறைத்துத் தமிழகத்தின் கல்கி, ஆனந்த விகடன் போன்ற தமிழ் இதழ்களும் ஆங்கில இதழ்கள் சிலவும் சாதிய நெருக்கத்தினாலும், வகுப்புப் பாசத்தினாலும் டி.வி எசு. நிறுவனத்தை வானளாவிப் புகழ்கின்றன.

எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் 'அத்தர்' பூசி மணக்க வைத்தாலும் டி. வி. எசி-ன் ஊழல்களும், அடக்குமுறைக் கொடுமைகளும் சந்திக்கு வந்து நாறத்தான் செய்யும். டி.வி.எசு. மட்டுமன்று; இந்தியாவின் எந்தத் தரகு முதலாளிய நிறுவனமும் ஊதிப்பருத்து மினுமினுக்கக் காரணியம் அவர்களின் திறமையோ உழைப்போ அன்று; ஆயிரக் கணக்கான தொழிலாளிகளின் வியர்வையும் அரத்தமும்தாம்.

0 இந்துச் சட்டங்கள்தாம் இன்றைய அரசியல் சட்டங்களுக்கெல்லாம் முதலாக உள்ளன !
0 தொன்மை நாகரிகத்திலும், பண்பாட்டிலும் தமிழர்களுக்கு அரசியல் சட்டமே இல்லையா ?
0 அதனை ஏன் சட்டத்துறைக் கல்வியில் இடம்பெறச் செய்யவில்லை ?
0 தமிழ் அறிஞர்கள், பல்கலைக் கழகங்கள் இத் துறையில் கவனம் செலுத்துவார்களா ?

கேட்கிறார் சட்டத்துறை மாணவர் ஒருவர்! இதற்கு விடையென்ன ?

—க. இராயவேல்.

[ஐய, "ஏன் இந்தப் புறக்கணிப்பு?" என்னும் சிறு கட்டுரையினை, இதன்வழித் தங்கட்கு அனுப்புகின்றேன். எங்களது சென்னை சட்டக் கல்லூரி 'ஆண்டு மலரில்' வெளியிடவேண்டி இதனை எழுதினேன். ஆயின், வெளியிடப் பதிப்பாசிரியர்கள் மறுத்து விட்டனர். நம் மியக்க அன்பர்களும் தெரிந்து கொள்ளவேண்டிய செய்தி இக்கட்டுரையில் இருப்பதால் தங்கட்கு இதனை அனுப்புகின்றேன். இயலுமெனில், "தமிழ் நிலத்"தில் வெளியிடுக.]

ஏன் இந்தப் புறக்கணிப்பு ?

முதலாண்டு பொதுச் சட்ட இளைஞர் (B. G. L.) பட்டப் படிப்பில் "Legal Theory-I" என்று ஒரு தேர்வுத்தாள். அந்தத் தாளுக்குரிய பாடத் திட்டத்தில் பழங்காலச் சட்டத்தின் சுருக்கமும் (Outlines of Ancient Law) ஒரு பகுதி.

பல்கலைக் கழகம் பரிந்துரை செய்துள்ள பாடநூல்களும், ஆசிரியர் தம் விரிவுரைகளும் இந் நாட்டில் நிலவிய பழங்காலச் சட்டமென்று எதனைச் சொல்கின்றன? 'இந்துச் சட்டம்" என்று ஒன்று இருந்ததாம், அந்நாளில்! இருக்கு, யசூர், சாம, அதர்வண என்னும் நான்கு வேதங்கள்தாம அந்த இந்துச் சட்டத்திற்கு முதன் மூலமாம்! அதன்பின், கௌதமா தரும சூத்திரம், பௌத்தயானு தரும சூத்திரம், அபததம்பா தரும சூத்திரம், வசிட்டா தரும சூத்திரம், விட்டுனு தரும சூததிரம் போன்ற தரும சூத்திரங்களும், கௌடில்யரின் அர்த்த சாத்திரமும், மனு சுமிருதி, யகுனவால்கிய சுமிருதி, பிரசரா சுமிருதி, நாரதா சுமிருதி, பிரகதபதி சுமிருதி, சம்பாயினு சுமிருதி போன்ற சுமிருதிகளும், 'அரும் பெரும்" சட்டக் கருத்துகளை நல்கினவாம்! அந்தச் சட்டக் கருத்துகள் தாம் என்னவாம்? எடுத்துக்காட்டாக, குற்றவியல் சட்டத்தின் சில கூறுகளைக் காணலாம்.

ஒரு சத்திரியனோ, வைசியனோ, ஒரு பிராமணனை அவமதித்து விட்டால, முறையே 100 பணம் அல்லது 150 பணம் தண்டம் செலுத்த வேண்டும். ஒரு பிராமணன் ஒரு சத்திரியனையோ, வைசியனையோ அவமதித்து விட்டால், முறையே 50 பணம் அல்லது 25 பணம் தண்டம் செலுத்தவேண்டும். சூத்திரனை மற்றவர்கள் அவமதித்தால் அது குற்றமாகாது; ஆனால், ஒரு சூத்திரன் பிராமணனை அவமதித்து விட்டால், உடனே சூத்திரனின் நாக்கு துண்டிக்கப்படும்.

பிறன் மனை புணர்தல், கற்பழிப்பு ஆகிய குற்றங்களை ஒரு பிராமணன் செய்தால், முறையே 500 பணம் அலலது 100 பணம் தண்டம் செலுத்த வேண்டும். அதே குற்றத்தை ஒரு சத்திரியனோ, வைசியனோ செய்தால், தண்டத்தொகை சற்று அதிகரிக்கும். ஆனால், ஒரு சூத்திரன் செய்துவிட்டால ......? அவனது ஆண்பால் உறுப்பு அறுத்தெறியப்படும்.

பிராமணன், சத்திரியன், வைசியன் ஆகியோர் யாரையாகிலும் கொலை செய்துவிட்டால், தண்டமாக ஆக்களைக் கொலையுண்டோர் குடும்பத்திற்குத் தர வேண்டும். ஒரு பிராமணன் சூத்திரனைக் கொலை செய்தால், பிராமணனின் மயிர் மழிக்கப்படும். ஆனால், ஒரு சூத்திரன் பிராமணனைக் கொலை செய்துவிட்டால், சூத்திரனின் உயிர் ஒழிக்கப்படும். அஃதாவது, பிராமணனின் மயிரும், சூத்திரனின் உயிரும் சமம்.

இதனைப் படித்தவுடன். 'அஃது என்ன நால்வகை பகுப்பு? பிராமணன், சததிரியன், வைசியன், சூத்திரன் என்று எதன அடிப்படையில் மாந்தர்கள் பகுக்கப்படுகின்றனர்?" என்று பலர் மனத்திலும் கேள்வி எழலாம்! இதற்கும் "புனித"மான இந்துச் சட்டம் விடை சொலகிறது! "நால்வகைப் பகுப்பைப் பிரம்மனே படைக்கும்போது செய்கிறான்; பிரம்மனின் நெற்றியிலிருந்து பிறப்பவர் பிராமணர்; பிரயமனின் தோளிலிருந்து பிறப்பவர் சத்திரியர்; பிரம்மனின் காலிலிருந்து பிறப்பவர் வைசியர்; பிரம்மனின் பாதத்திலிருந்து பிறப்பவர் சூத்திரர்" இதுதான் விடை! எப்படிப்பட்ட அரிய விடை பார்த்தீர்களா?

ஆக, இத்தகைய இந்துச் சட்டம்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் பழங்காலத்தில் இருந்த சட்டமாம்! அப்படியானால், அதற்கு முன் இந்தியத் துணைக் கண்டத்தில மாந்தர்களே இல்லையா? இருந்திருந்தால், அவர்கள் தங்களுக்கெனச் சட்டங்களை வகுத்துக் கொள்ளவில்லையா? இந்துச் சட்டத்திற்கு முன பழங்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில எந்தச் சட்டமும் இல்லை என்பது போலத்தான் நமது பலகலைக் கழகத்துப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படுகிறது!

ஆனால், உண்மை நிலையென்ன? மாந்தவியல் மற்றும் வரலாற்று அறிஞர்கள் என்ன சொல்கின்றனர்? மேற்காசியப் பகுதியிலிருந்து கைபர், போலன் கணவாய்கள் வழியே ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகட்குமுன் ஆரிய இனம் எனப்படும் அநாகரிக இனம் ஒன்று இந்தியத் துணைக்கண்டத்திற்குள் புகலாயிற்று. அந்த இனத்தின் படைப்புகள் தாம் வேதங்கள், தரும சூத்திரங்கள் மற்றும் சுமிருதிகள், அவற்றிலிருந்து பிறந்ததுதான் இந்துச் சட்டம். ஆரியர்கள் இந்தியத் துணைக் கண்டததில் நுழைவதற்குப் பன்னெடுங்காலம் முன்னரே தொன்று தொட்டு இந் நாட்டை ஓரினம் ஆண்டு வந்தது. அவ்வினமே தமிழினம் என்றும், திராவிட இனம் என்றும் நம்மால் சொல்லப்படுகின்றது; சூத்திர இனமென்று ஆரியரால் இகழப்படுகின்றது! திராவிட இனத்தின் நாகரிகச் சிறப்புக்குச் சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சிகளும் இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே கழகம் வைத்துத் தமிழ் வளர்த்த மரபு வழிச் செய்திகளும் சான்று பகர்கின்றன. அத்தகைய திராவிட இனம் தனக்கென்று ஒரு சட்ட நெறியை வகுத்துக் கொள்ளாமலா இருந்திருக்கும்? கண்டிப்பாக வகுத்திருக்கும்! இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் பேசப்பட்டு வந்த தமிழ் (சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் காணப்பட்ட எழுத்து வடிவங்களைப் போன்றே அண்மையில் தமிழகத்து மலைக் குகைகளில் சில்லாயிரம் ஆண்டுகட்கு முன் வரையப்பட்டுள்ள ஓவியங்களின் அடியிலும் எழுத்து வடிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இஃது அன்றைய சிந்து சமவெளி நாகரிக மக்கள் தமிழே பேசினர் என்பதற்குத் தலையாய சான்றாகும்.) இன்று ஒரு குறுகிய எல்லைக்குள் அடங்கிவிட்டாலும், என்றும் மாறாத இளமையோடு திகழும் தமிழில் அன்றைய தமிழ்ச் சட்டக் கருத்துகள் இன்னும் காணக் கிடக்கின்றன.

இங்ஙனம், இந்நாட்டில் இந்துச் சட்டம் வருவதற்குப் பன்னெடுங் காலமுன்பே கோலோச்சி வந்த தமிழச் சட்டத்தைப் பாடத் திட்டத்தில் குறிப்பிடாமல் பல்கலைக்கழகம் புறக்கணித்தது ஏன? ஒரு வேளை, தமிழச் சட்டமும், இந்துச் சட்டமும் ஒன்றுதான் என்று மயங்கி விட்டதோ? அப்படியாயின அது பெரிய தவறாகும்! பிறப்பை வைத்து மாந்த இனத்தை நான்காகப் பிரிப்பது இந்துச் சட்டம். 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்!" என்பது தமிழ்ச் சட்டம். இப்படி அடிப்படையிலேயே வேறுபடுவன தமிழ்ச் சட்டமும, இந்துச் சட்டமும்! தமிழ்ச் சட்டம் மிக மேலோங்கிய நகர நாகரிக மக்களால் இயற்றப்பட்டது. இந்துச் சட்டம் மிகக்கீழாகிய காட்டு நாகரிக மக்களால் இயற்றப்பட்டது.

பிறந்த, பிறந்துள்ள, பிறக்கப்போகிற அறிஞர்க்கெல்லாம் அறிஞராகிய திருவள்ளுவப் பெருமான் அருளிய திருக்குறள் அறிவிலோங்கிய தமிழ்ச் சட்டக் கருத்துகளைத் தாங்கி இன்றும் திகழ்கிறது. அத்தகைய திருக்குறளில் புதைந்துள்ள சட்ட நுணுக்கக் கருத்துகளை ஆராய்ந்து உலகுக்குப் பறைசாற்ற வேண்டிய கடப்பாடுடைய நமது பல்கலைக் கழகமே பழங்காலச் சட்டமென்றால், இந்துச் சட்டந்தான் என்று கூறித் தமிழ்ச் சட்டத்தைப் புறக்கணித்துள்ளது. இனியாகிலும் பல்கலைக்கழகமும், அறிஞர்களும் இத்துறையில் முயற்சியெடுத்துத் தமிழர்க்கிருந்த சட்ட முறைகளைக் கண்டு, தேர்ந்து அவற்றைப் பாட நூல்களில் இணைப்பார்களா? ப

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும்; கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல், முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

எங்களால் இப்படித்தான் சொல்ல முடிகிறது !

* தினமணிக் கதிர் : அண்மையில் தினமணியிதழோடு வெளியான தினமணிக் கதிரில், 'தும்பி'யாரின் விறு-விடைப்பகுதிக்கான ஒரு கேள்வி :

'வட நாட்டினர் ஏன் ஆங்கிலத்தை எதிர்க்கின்றனர் ?'

அதற்குத் தும்பியாரின் விடை :

'தமிழ்நாட்டில் இந்தியை எதிர்க்கவில்லையா, அதுபோல்தான் வடநாட்டில் ஆங்கிலத்தை எதிர்க்கின்றனர்.'

விளக்கம் : 'பார்ப்பனியத் தும்பியே, ஏன் தமிழை வழிபாட்டு மொழியாக ஏற்க மறுக்கிறார்கள் பார்ப்பனர்கள்? மேலும், திணிக்கப்படும் இந்தி மொழியை எதிர்ப்பதற்கும், இயல்பாகக் கற்கும் ஆங்கில எதிர்ப்பிற்கும் வேறுபாடு இல்லையா? அடிமைப்படுத்துகிற உங்கள் வகுப்பிடமிருந்து நாங்கள் இதைத்தானே எதிர்பார்க்க முடியும்.

* இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி : தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அமெரிக்க, பிரித்தானிய அரசுகள், சீக்கிய தீவிர இயக்கத்தினரைப் பிடித்துக்கொடுக்க முழு ஒப்புதல் அளித்ததுடன், அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

விளக்கம் : இலங்கைச் சிக்கலைப்பற்றி குறிப்பிடும் இந்திய அரசு, அதை ஓர் உள்நாட்டுச் சிக்கல் என்று குறிப்பிட்டுவிட்டு, அதில் அதிகமாகத் தலையிடாமல் போனதுபோல், ஏன் தன் உள்நாட்டுச் சிக்கலில் நடந்துக் கொள்ளாமல், பிற முற்றாளுமை (ஏகாதிபத்திய) நாடுகளின் துணையை நாடுகிறது? என்ன முறைமை (நீதி)யோ!

* இந்திய ஆளும் வகுப்பு: இராசீவ் உருசியா சென்றதினால், இந்தியாவுக்கு 1,100 கோடி கடனுதவி; மேலும் இந்திய-உருசிய கூட்டுத்திட்டங்கள்.-செய்தி.

விளக்கம் : அந்த 1,100 கோடி உருவாவிற்குத் திட்டம் தீட்டப் பெறுகிறவரை தேசிய ஒற்றுமை பற்றி அரசு பேசாதே...! ஏனெனில், ஒற்றுமை பற்றிப் பேசினால் அதை சம பங்காக்கவேண்டுமே...!!

மேலும் இந்திய-உருசிய கூட்டுத் திட்டங்கள் என்பதை விட, கூட்டுக் கொள்ளைத் திட்டங்கள் என்பதே சரி.

— நுண்ணோக்கி.

உ.த.மு க. உறவு மடல்

1. நம் பாவலர்கள் !

அறிவியற் பாடல் எழுதும் தமிழியக்கன் எழுச்சிப்பாடல் எழுதும் இளஞ்சித்திரன், கதைப் பாடல் புனையும் கன்னல், ஆற்றல் மிக்க தரங்கை பன்னீர்ச்செல்வன், கடலூர். மணிமாறன் ஆகிய நம் பாவலர் வரிசை கண்டு மகிழ்கிறேன். இப் பாசறைப் பாவலர் அனைவரும் கூடி ஓரமைப்பாகச் செயல்படுதல் வேண்டும்.

தமிழ், தமிழினம், தமிழர்நலம். தமிழினவிடுதலைக்காக நிற்கும் நம் பாவலர்கள் தங்களின் ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கவும், இளைய தலைமுறைகளிடம் பாவலர் சென்று படைப்பாற்றலை வளர்க்கவும் வேண்டும்!

இதற்கான முன்முயற்சியை ஏற்றுச் செயல்படுதல் வேண்டும். அதற்கு அணியப்படுத்திக் கொள்ளும் ஆற்றலர் எவரென்பதனை என்னால் கூற இயலாது. அம் முயற்சியைத் தூண்டிவிட இம் மடல் வழி முயல்கிறேன். அவ்வளவுதான் !

- பறம்பை அறிவன்

2. நம் தெளிவு !

தோழமை உள்ளங்களே,

நம் குமுகவியல் பார்வை எத்தகையது? நாம் தமிழர். நாம் மாந்தநேய மறுப்பாளர் அல்லர். நம் தமிழினப்பற்று அதற்குத் தடையாகாது. ஏனெனில் 'தமிழன்' பிறமண்ணை வளப்படுத்தியவனே யன்றித் தன் வயப்படுத்தியவன் அல்லன். தன் உயர்ந்த அறப்பண்பை உலகளவில் ஊன்ற எடுக்கும் முயற்சியில் தோல்வி காணலாம். அது கற்பதில் அவனுக்குப் பயிற்சி தருவதாகும்.

பாவலர் பாலுறவு பற்றிய தம் ஆராய்ச்சியை எடுத்துக் காட்டியுள்ள பாரிசுச் செலவின் பட்டறிவை நோக்குக !

நம் கண்ணோட்டம் விரிவுற விரிவுறத் தமிழனின் ஆழமான நோக்கு-அடிப்படைக் கூறு புரியும்.

அன்பன், - பறம்பை அறிவன்

தமிழர்க்கிருந்த சட்ட முறைகள் எங்கே?

ஈழச் சிக்கலும் - இராசீவ் காந்தியின் இரண்டகத் தன்மையும்!

— வள்ளிகேள்வன் —

அண்மையில் வெளிநாடுகளுக்குச் சுற்றுச் செலவு சென்றுவந்த இராசீவ்காந்தி, பிரான்சு நாட்டில் தொலைக்காட்சி அமைப்பு ஒன்றிற்கு அளித்த நேருரையில், கீழ்க்காணுமாறு கூறியிருக்கிறார்:

'அரசியல் தீர்வில் இலங்கை அரசுக்குத் தற்போது நம்பிக்கை வந்துள்ளது. அரசியல் தீர்வை எட்ட தற்போதுகூட காலம் தாழ்ந்துவிடவில்லை என்று நம்புகிறேன்'.

இந்த நேருரைக் கருத்து அவ்வளவு எளிதாகத் தள்ளிவிடக்கூடிய கருத்து அன்று. இதன் பின்னணியில் பல உண்மைகள் அடங்கியுள்ளன.

இராசீவ்காந்தி ஈழச்சிக்கலைத் தீர்க்கப் பாடுபடுகிறார் என்று இங்குள்ள அமைச்சர் 'திலக'ங்கள் வாய் கிழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவன்று. ஈழத்தில் தமிழினத்தை முற்றிலும் அழிக்க முற்படும் செயவர்த்தனாவின் முயற்சிகளுக்கு மறைமுகமாக ஆதரவும் ஊக்கமும் தந்துவருகிறார் இராசீவ்காந்தி.

இந்த ஏழு மாதகாலத்தை எடுத்துக்கொண்டால் கூட ஈழத்தில் நடந்த வன்முறை நிகழ்ச்சிகள் மிக அதிகமானவை; கொடுமையானவை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கலேவியாவில் 7 தமிழர்களும் மண்டூரில் 5 தமிழர்களும் கொல்லப்பட்டார்கள். துரைநீலவேலி என்னுமிடத்தில் தாக்குதல் நடந்தது. எத்தனையோர் இறந்தனர் என்று தெரியவில்லை. (சனவரி-28)

கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேசுவர மீனவர்களை மறுபடியும் சிங்களக் கடற்படை தாக்கியது. படகை உடைத்தனர். ஏறத்தாழ 2 கல்வெடை மீன்களைக் கடலில் கொட்டினர். (பெப்ருவரி-9)

மன்னார் பகுதியில், மனைவி/மக்கள் முன்பு கணவன்மார்களைச் சிங்களப் படையினர் சுட்டுக்கொன்றனர். மொத்தம் 32 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். குடிசைகளை எரித்து நாசப்படுத்தினர்: (பெப்ருவரி-12)

தமிழக மீனவர்களில் ஆனந்தன், அந்தோணி என்ற மீனவர்களைச் சிங்களப் படையினர் சுட்டுக் கொன்றனர். (பெப்ருவரி-15)

தமிழர்களை ஒன்றாக நிறுத்தி சன்னெய் ஊற்றிச் சிங்களக் காடையர் எரித்தனர். ஈழத்தமிழ் ஏதிலிகள் கண்ணீருடன் நேருரை! (மார்ச்சு-1)

நேற்று இலங்கையின் கிழக்கு மாநிலப்பகுதியில் 34 வீடுகள் சிங்களப்படையினர் முகமதியர்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. அதனால் தமிழர்கள் வீடு பொருள்களை இழந்து ஏதிலிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் (ஏப்ரல்-25)

யாழ்ப்பாணம் வடபகுதியில் அரியாலை என்னுமிடத்தில் நவரத்தினம் என்பவர் தம் புதிய மனைவியுடன் நண்பர் வீட்டில் விருந்துண்ணும்போது சிங்களப்படையினர் புகுந்து சுட்டார்கள். அங்கிருந்த ஆறுபேரும் அரத்த வெள்ளத்தில் சாய்ந்து மடிந்தனர். (மே-3)

சிங்களப்படை வீடுகளில் தமிழ்ப்பெண்களை வெற்றுடம்பாக்கிக் கற்பழிக்கிறார்கள். இரவு நேரத்தில் பெண்களின் துயர ஓலக்குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது என்று தமிழ் ஈழச் செய்திப் பொறுப்பாளர் மகேசுவரி - வேலாயுதம் குறிப்பிட்டார். (மே:7)

இராமேசுவரத்தில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை, சிங்களப் படையினர் தாக்கி ஏராளமான இறால் மீன்களை பறித்துச் சென்றனர். சண்முகவேல், சேகர், கார்மேகம் ஆகியோர் காயமடைந்தனர். (மே-10)

இலங்கையில் 95 தமிழர்களை உயிருடன் எரித்துக் கொலை செய்த சிங்களப் படையினர், அந்தப் பிணங்களைத் தெருக்களில் வீசினர். ஏதும் அறியாத தமிழ்ப் பெண்களைப் பிடித்து இழுத்துச்சென்று வெற்றுடம்பாக்கிக் கற்பழித்து, அவர்களின் மார்பகங்களை அறுத்தெறிந்து கொடிய தாண்டவம் ஆடுகின்றனர். (சூன்-1)

சிங்கள வெறியர்களின் கொடுஞ்செயல் உலகுக்கு எட்டாதவாறு மூடி மறைப்பதும் தொடர்கிறது. வெளிச்சத்திற்குக் கொண்டுவர முயல்வோர் மீதும் சிங்களக் கொடுங் கை பாய்கிறது. அதையும் மீறி எடுத்த நிழற் படங்களைப் பார்க்கவே கண் கூசுகிறது. (சூன்-3)

இலங்கைக் கடற்படையினர் இராமேசுவர மீனவர்களைத் தாக்கி, அவர்களது படகையும் தாக்கினார்கள். கண்காணிப்புக் கப்பலில் மீனவர்களை ஏற்றி மணல் மூட்டைகளின் மேல் கைகளை வைக்கச்சொல்லி, இரும்புத் தடியால் வலிவு கொண்டமட்டும் ஓங்கி - ஓங்கி அடித்திருக்கிறார்கள்: இதில் பவுல்ராசு என்ற மீனவரது கையெலும்பு நொறுங்கி விட்டது. அவரது இடக்கை விரல் ஒடிக்கப்பட்டது: நேவிசு, நாகராசு, சுப்பிரமணியம் ஆகியோருக்கு முதுகிலும், உடம்பிலும் வலுத்த காயங்கள் ஏற்பட்டன. (சூன்-7)

திரிகோணமலைப் பகுதியில் படைத்துறைத் துணையுடன் சிங்களக் குண்டர்கள், 500 சிற்றூர்களை எரித்து அழித்ததும் 80 தமிழர்கள் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. அப்பகுதி வாழ் தமிழர்கள் உயிருக்கு அஞ்சி ஆயிரக் கணக்கில் அருகிலுள்ள காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். காடுகளில் 35 ஆயிரம் தமிழர்கள் கடந்த பதினைந்து நாட்களாகப் பசி, பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்றனர். (சூன்-16)

இத்தனைக் கொடிய நிகழ்ச்சிகள் நடந்தும் நடந்துகொண்டும் இருக்கும்போதுதான், தில்லியில் இராசீவ்-செயவர்த்தனா சந்திப்பு நிகழ்ந்தது. ஆனால், அந்தச் சந்திப்பு உண்மையில் ஈழச் சிக்கலைத் தீர்ப்பதற்காக நடைபெறவில்லை

சிங்களப் படைத்துறையை வலிமையாக்கிக்கொள்வதற்கான வழிமுறை காணவுக்கே அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. ஈழச் சிக்கலைப்பற்றி இருவருக்கும் அக்கறையின்மையினாலேயே அதை உடைப்பில் போட்டுவிட்டு, வங்கதேச புயல் இழப்புகளைப் பார்க்கச் சென்றுவிட்டார்கள். அந்தக் கொடியவர்களின் இறுமாப்பைப் பாருங்கள்! வங்க தேசத்தில் முதலைக் கண்ணீர் வடித்துவிட்டுத் திரும்பி வரும்போது, ''வங்கதேச மக்களின் ஆழ்ந்த பரிவைச் சுமந்த வண்ணம் செல்கிறோம்'' என்று உறவுச்செய்தி வேறு விடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள்

இருவரும் திரும்பிவந்தவுடன் கூட்டாக அளித்த நேருரைகள்தாம் மிகவும் முகாமையானவை

''எங்களிடையே சிக்கல் ஏதும் பெரிதாக ஒன்றும் இல்லை'' —செயவர்த்தனா

''இந்தியாவிற்கும்- இலங்கைக்கும் இடையே எவ்வகைச் சிக்கலும் இல்லை. இலங்கைத் தமிழர் சிக்கல் பற்றி நாங்கள் நடத்திய பேச்சு இணக்கமாக (சுமுகமாக) இருந்தது'' — இராசீவ் காந்தி.

இருக்காதா பின்னே? கச்சத்தீவு உடன்பாட்டைச் செயவர்த்தனா மீறியது குறித்துக் கேட்கவில்லை. ஈழத்துப் படுகொலைகளைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை. இந்தியத் தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுவதற்குக் கூட ஒரு சொல் கேட்கவேயில்லை. அப்புறம் பேச்சு இணக்கமாகத்தானே இருக்கும்

ஏனெனில், அவர்கள் சிங்களப் படை வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும், ஈழ விடுதலைப் போராளிகளை ஒழிப்பதற்கும் அல்லவா திட்டம் தீட்டியிருக்கிறார்கள்

இவர்களது பேச்சு நடந்துகொண்டிருக்கும்போது இலங்கையில் பிரேமதாசா எப்படி வாய்விழ்க்கிறார் பாருங்கள்:

''இலங்கையில் வன்முறை நின்றால்தான் செயவர்த்தனா-இராசீவ் காந்தி பேச்சு பயனளிக்கும். இரு நாடுகளுமே புத்தர் மற்றும் காந்தியின் அருண்மை ஓதுவங்களில் (அகிம்சைப் போதனைகளில்) நம்பிக்கை கொண்டுள்ளன.''

அட இழவே! இலங்கையில் யார் பொறுப்பில் எப்படிப்பட்ட வன்முறைகள், நெஞ்சாங் குலையும் நடுங்கும்படி நடக்கின்றன என்பது நம் இராசீவ் தம்பிக்குக் கூடத் தெரியாமலா போய்விட்டது தமிழினம் என்றால் அவ்வளவு இளப்பமா?

இத்தனைக்கும் மூளை மழுங்கிய செயவர்த்தனாவுக்கு வலக்காரமான திட்டங்கள் வகுத்துக்கொடுத்துள்ளார் இராசீவ் என்பவர். தமிழர்களுக்கு எளிதில் புரியாத ஒருவராகும். இராசீவ் கொடுத்த முகாமையான திட்டம்தான் மூன்று மாதம் போர் நிறுத்த உடன்பாடு. இலங்கையில் நடக்கும் இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவே இந்தப் போர் நிறுத்த நடிவடிக்கை என்பதெல்லாம் வெறும் ஏமாற்று நாடகமாகும். உண்மையில் சிங்களப் படையை எல்லா வகையிலும் முற்றாக வலுப்படுத்தி கொள்ளவே இந்த மூன்று மாதப் போர்நிறுத்த நடவடிக்கை கொண்டுவரப்பட்டிருக்கிறது

எல்லாம் இராசீவ் காந்தி சொல்லிக் கொடுத்தபடி அது எவ்வாறு என்பதைக் காண்போம்.

1 இந்த மூன்று மாத இடைவெளியில், இலங்கைப் படைக்குப் பயிற்சியளிக்க, பாகித்தான் தற்

(தொடர்ச்சி 6 - ஆம் பக்கம்)

உ. த. மு. க. அவலூர்ப்பேட்டை கிளையின் சார்பில், ஆடவை 31 ஆம் நாள், (15-7-1985) திங்கள் அன்று காலை 10 மணிக்கு, அரசு மேநிலைப் பள்ளி இலக்கிய மன்ற துவக்க விழாவின் போழ்து

உயர்மிகு

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அவர்கட்கு அன்புடன் வாசித்தளித்த

வரவேற்பு இதழ்!

கடை எழுத்தணி அகவற்பா.

வாடிடும் பயிருக்கு வான்மழைபோல் தமிழ்ப் பா
தேடிடும் தலைமைக்கு உவமைப் புல வ
கூடிடும் தமிழுணர்வே கொள்கையெனும் பாவ ல
நாடிடும் உலகுஉமை! நாணயத் தலைவர்நீ ரே
பாடிடும் பாட்டினிலும் பாராண்ட தமிழரின் று
மறத்தமிழர் ஆட்சியிலும் தமிழினம் ஒளி பெ
றறத்தாயென மொழிகாக்க ஆளில்லை உமைப்பெரு
கருப்பொருளாய்க் காண்கின்றோம் கலக்கமுள் நெஞ்
சரவே வண்டமிழை வளர்த்தீர் சூழ்ச் சி
யறம்பேசும் வடக்கதனை அடக்கிடுவீர் உயிர் த்
தீயினை ஈந்தே இனம்வளர்த்தீர் விழியா தி
ரவொடு பகலும் புரக்கும் பல்லாயி ர
முரச முத்துகளை முகிழ்ந்தெடுத்தீர் தா னா
உரம்பெறவே தமிழ்க்கழகம் கண்டிட்டீர் நீ ர்
கூறும்மொழி, குமுகாயம் ஏற்றிடுமே தலை வா
கூறுபவர் இல்லைஉமக் குவமையென! போற்றுந்தமிழ்
பெருகமேல் உ. த மு க.வெனும் வித்திட்டீர், வாழ்க
பாவலரேறு பெருஞ் சித்திரனார் வாழ்க வே

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒய்ந்திடா உள்ளமும் உணர்வும்
உயிர்ச்செறிவும் அருந்தமிழ்த் தொண்டும்
தேய்ந்திடா விரலும் தாளும்
உரங்கொண்ட தொண்டர்தம் படையும்
சாய்த்திடா உம்முடலும் ஊக்கமும்
சலிப்பினல் சரிந்திடாப் பகுத்தறிவும்
மாய்த்திடாத் தமிழும் மாண்புற
உம்பணி தொடர்க! வருக! வருகவே!

இன்னணம்
உ. த மு. க அவலூர்ப்பேட்டை, (தெ.ஆ.மா.)
(இயற்றியவர்: தா. நெஞ்சிற்கினியன்)

''அண்ணா!''

''என்ன தம்பி!''

''காலை 6 மணிக்கு முதன் முதலாக வானொலியில் கேட்கும் செய்தி இந்தியில்தானே?''

''ஆமாம்.''

''தமிழ் நாட்டிலுள்ள நடுவண் அரசு அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளில் முதல் இடம் பெற்றிருப்பது இந்திதானே?''

''ஆமாம்.''

''தொலைக் காட்சியில் 'தேசிய நிகழ்ச்சிகள்' என்னும் பெயரால் ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகள், படங்கள். பாடல்கள் எல்லாம் பெரும்பாலும் இந்தியில்தானே உள்ளன?

''ஆமாம்.''

''ஆட்சிமொழிச் செயற்பாட்டுக் குழுக்களை நடுவண் அரசு அலுவலகங்களில் மாவட்டம் தோறும் அமைத்து விரைவில் பரப்பவேண்டும் என்று சொல்வது இந்திமொழியைத் தானே?'

''ஆமாம்''

''ஒருமொழியின் வளர்ச்சிக்கும் பரப்புதலுக்கும் என தில்லி அரசு பல கோடிக்கணக்கில் செலவிடுவது இந்தி மொழிக்குத் தானே?''

''ஆமாம்.''

''அப்படியிருக்க இந்தியத் தலைமை அமைச்சர் சென்னைக் கூட்டத்தில், 'இந்தித் திணிப்பு' என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பேசியிருப்பதை என்னவென்று சொல்வது?

''எனக்குத் தெரியாது தம்பி!''

— தமிழவேள்

தமிழீழச் சிக்கல் தீரத் தமிழீழம் ஒன்றே வழி!

ஈழச் சிக்கலும்-இராசீவ் காந்தியின் இரண்டகத் தன்மையும்!

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது 38 போர்ப் பயிற்சியாளரை உருவாக்கியுள்ளது. இவர்கள் மூலம் 1,000 பேருக்கு அதிரடிப் பயிற்சி கொடுப்பதற்கான ஏற்பாட்டை பாகித்தானில் சிங்கள அரசு செய்துவிட்டது. இந்தியாவின் எதிர் நாடான பாகித்தானுடன் சிங்கள அரசு செய்துக்கொண்ட இந்த உடன்பாட்டை உடனே தடுத்து நிறுத்தும்படி பல தலைவர்கள் விடுத்த வேண்டுகோள்களை இராசீவ் காந்தி காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

2. சீனா, பாகித்தான், இத்தாலி முதலிய நாடுகளிலிருந்து நிறைய, புதுமையான போர்க்கருவிகளைச் சிங்கள அரசு வாங்குகிறது.

3. உலகிலேயே ஒழுக்கமற்ற படை சிங்களப் படை என்று இலண்டன் இதழான 'பாரா' தெரிவிக்கிறது. இந்தப் படையை வைத்துக் கொண்டு வன்முறைத் தடைச்சட்டம் கொண்டுவர முடிவு செய்துள்ளார் செயவர்த்தன.

அமெரிக்கத் தாளிகையான 'நியூசு வீக்' இந்த வன்முறைத் தடைச்சட்டம் கொண்டு வருவது பற்றிக் குறிப்பிட்டுக் கவலை தெரிவித்துள்ளது.

'தமிழர்களுக்கு எதிராகத் தாங்கமுடியாத கொடுமைகளைச் சிங்களப்படை செய்துவருகிறது. கருவுற்ற பெண்களின் வயிற்றைக் கீறிக் குழந்தையை வெளியே எடுத்து, ஆண் குழந்தைகளின் தலையை நசுக்கிக் கொல்லும் அளவிற்குக் கொடுமையான செயல்களைச் செய்துவருகிறது. இந்தப் படையை வைத்துக்கொண்டு வன்முறைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவருவதாகச் செயவர்த்தன கூறிவருகிறார்' என்று அது குறிப்பிடுகிறது.

4. இலங்கைக்கு மொத்தம் 12 நாடுகள் பொருளுதவி செய்துவருகின்றன. இலங்கையில் தொடர்ந்து வன்முறைகள் நிகழ்வதால் அந்த நாடுகளின் பொருளுதவி நடப்பு ஆண்டில் நிறுத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் மூன்றுமாதப் போர் நிறுத்தம் (இராசீவ் சொல்லிக்கொடுத்த திட்டம்) என்ற முடிவை முன்வைத்துள்ளது. இதன் மூலம் 12 நாடுகளும் 482 பதிலக்கம் (மில்லியன் தாளுரு (டாலர்) அளிக்க முன்வந்துள்ளன. இந்த உண்மையை இலண்டனிலிருந்து வெளியாகும் **'பைனான்சியல் எக்சுபிரசு'** என்ற தாளிகை தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளது.

'இலங்கைக்கு உதவியளிக்கும் மேற்குநாடுகளின் தலைவர்கள் அடுத்த கிழமையில் உலகவைப்பக அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில்தான் இலங்கைக்கான பொருளுதவி குறித்து முடிவு செய்யப்படும். **எனவே இலங்கைத் தமிழர் சிக்கலுக்கு அமைதியான தீர்வுகாண இலங்கை அரசு முனைந்து செயல்படுகிறது என்று உலகவைப்பக அதிகாரிகளையும் மற்ற நாட்டுத் தலைவர்களையும் நம்பவைக்க இலங்கை அரசு விரும்புகிறது. அவர்கள் நம்பினால்தான் உதவி கிடைக்கும் என்று நம்புவதால் இந்தத் தீர்வுக்கு முன்வந்துள்ளது'.**

ஆக, மூன்றுமாதப் போர்நிறுத்தத்தினால், சிங்கள அரசுக்கு இத்தனை வகையான பேருதியங்கள் உள்ளன. இதற்கெல்லாம் வழியமைத்துக் கொடுத்துவிட்டுத்தான் இராசீவ் வெளிநாட்டுச் சுற்றுச்செலவை மேற்கொண்டார்.

ஈழச்சிக்கலைப் பொறுத்தவரை உறுதியானதும் இறுதியானதும் ஆன ஒரே தீர்வு தனிஈழம் காண்பதே! ஆனால், இராசீவோ தனிஈழக் கொள்கையை ஆதரிக்கமாட்டோம் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். இத்தனைப் படுகொலை நிகழ்ச்சிகளுக்கும் பிறகு தனிஈழம் தவிர்ந்த அரசியல் தீர்வு எதுவும் தமிழர்க்குப் பயன்படப் போவதில்லை. வெறும் அரசியல் தீர்வு என்ற போர்வையில் காலம் தாழ்ந்து கொண்டே போவதையும், அதே சமயம் தமிழினம் பெரிதும் அழிக்கப்படுவதையும்தான் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்த உண்மைகள் எல்லாம் இராசீவிற்குத் தெரியாதன அல்ல. அப்படியிருந்தும் பிரான்சு தொலைக்காட்சிக்கு அளித்த நேர்உரையில், 'அரசியல் தீர்வில் இலங்கை அரசுக்குத் தற்போது நம்பிக்கை வந்துள்ளது. அரசியல் தீர்வை எட்ட தற்போதுகூட, காலம் தாழ்ந்து விடவில்லை என்று நம்புகிறேன்' என்று கூறியிருக்கிறார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஈழத்தமிழினம் அழிவதை இராசீவ் வரவேற்கிறார் என்பதுதானே.

மேலும் போதியகால இடைவெளியில் சிங்கள அரசு தனது படைத்துறையை வலுப்படுத்திக்கொள்ளுமுன், ஈழப்போராளிகள் தாக்குதல் நடத்திவிடக் கூடாதே என்பதற்கும், இராசீவ் ஈழச்சிக்கலைத் தீர்க்க உண்மையிலேயே பாடுபடுகிறார் என்று உலக நாடுகளை நம்பவைப்பதற்கும் **'திம்பு'** நகரில் பேச்சு என்றொரு போலியான நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், திம்பு பேச்சிலும் உருப்படியான உடன்பாட்டுத் திட்டங்கள் ஏதும் வைக்கப்படவில்லை. செயவர்த்தனவின் தம்பி நேரளிப்புச் (தாக்கல்) செய்த திட்டமோ, ஏற்கனவே 1984-இல் அனைத்துக்கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்படாமல் தள்ளப்பட்ட திட்டம்தான். ஆனால், சிங்கள அரசின் இப்படிப்பட்ட திமிர்த்தனங்களையெல்லாம் இராசீவ் கொஞ்சம்கூடக் கண்டுகொள்வதேயில்லை. அவருடைய ஒவ்வொரு செயல்முறையும் செயவர்த்தவுக்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் ஈழப்போராளிகளை இழிவுபடுத்துவதாகவுமே இருக்கிறது.

அமெரிக்காவில் ஓர் ஒளிபரப்புக் குழுமத்தில் **இராசீவ்** அளித்த தொலைக்காட்சி நேருரையில்,

'அண்டை நாடுகளுடன் எங்களுடைய உறவுகளை முன்னேற்ற முயன்றுகொண்டிருக்கிறோம். இந்தியா ஒரு பெரிய நாடு என்றும், தாங்கள் மிகவும் சிறிய நாடுகள் என்றும் எங்களுடைய அண்டை நாடுகள் நினைக்கின்றன. ஆனால், உருவத்தில் ஒன்றுமில்லை என்பதை நாங்கள் அவற்றுக்கு விளக்க முடியும்' என்று கூறியிருக்கிறார்.

இது குறிப்பாக, சிங்கள அரசுக்கு இராசீவ் அளிக்கும் நம்பிக்கையும் ஊக்கமுமாகும். ஏனெனில், இந்தியாவுக்கு மிகமிக அருகில் இருக்கும் சிறிய அண்டை நாடு இலங்கைதான் என்பதை இங்கே நோக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமையில் 'திம்பு' பேச்சை ஆகஃச்டு 12-ஆம் பக்கலுக்குத் தள்ளிப்போட்டிருப்பது, காலத்தை நீட்டிக்கும் வலக்காரமான செயலேயாகும். (இராசீவைப் பொறுத்தவரைதான் அரசியல் **தீர்வை எட்ட, காலம் தாழ்ந்துவிட வில்லையே!)**

திம்புப்பேச்சு நடந்துகொண்டிருந்தபோதும், **ஆகஃச்டு 12-ஆம் பக்கலுக்குத் தள்ளிப்போட்டிருக்கும் போதும்,** சிங்களப் படையினர் **ஈழத்தமிழர்மீது வெறித்தாக்குதல்** நடத்துகின்றனர். **இந்த உடன்பாட்டு மீறலை இராசீவ் கண்டிக்க வேண்டாமா? ஆனால்,** இதுவரை அவர் கண்டிக்கவும் இல்லை. **கண்டு**கொள்ளவும் இல்லை. மொத்தத்தில், போலித்**தன**மான நம்பிக்கையைக்காட்டி ஈழத்தமிழினத்தை **அழிக்க** முற்படுகிறார் இராசீவ்காந்தி. **இது முழுக்க உண்மை** என்பதற்கு சென்னையில் அவரளித்த **நே**ருரையே, உரைகல்போல் தெளிவாகத் தெரிவிக்**கிற**து.

பேராயக்கட்சியின் நூற்றாண்டு விழாவுக்குச் **சென்னை** வந்த இராசீவ், கடற்கரையில் நடந்த கூட்டத்தில் திரளாகக் கூடியிருந்த மக்கள் எதிரில், **அவர்களுக்கு** நம்பிக்கை ஊட்டுவதுபோல பேசுகிறார்:

'இலங்கைத்தமிழர்களின் விடுதலை உரிமைகளுடன் அவர்களுடைய பண்பாட்டைப் பின்பற்றி வாழ, எல்லா உரிமைகளையும் நுகர அவர்களுக்குப் பெற்றுத் தரவேண்டியவர்களாக இருக்கிறோம்! இலங்கைத் தமிழர்களுடைய உரிமைநிலைகளைப் பறிக்கக்கூடிய எந்த முடிவையும் நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது'.

இனி, ஆளுநர் மாளிகையில் செய்தியாளர்களுக்கு அளித்த நேருரையில் அவர் கூறியது வருமாறு:

'இலங்கைத் தமிழர்களுக்கும் நமக்கும் எந்த வகைத் தொடர்பும் இல்லை. இலங்கையின் உள்நாட்டுச் சிக்கலில், இந்தியா தலையிடுவது ஆகாது. தனிஈழக்கோரிக்கைக்கு இந்தியா ஆதரவளிக்காது. பேச்சு நடவடிக்கைகளில் தலையிட இந்திய அரசு விரும்பவில்லை. ஒருவரின் கருத்துகளை மற்றொருவரிடம் கூறும் பணியாளாகச் செயல்பட நாங்கள் விரும்பவில்லை'.

தனிஈழக் கொள்கையை ஆதரிக்காமலும் இலங்கையின் உள்நாட்டுச் சிக்கலில் தலையிடாமலும் கருத்துகளை இடம்மாற்றும் பணியாளாக இருக்கவும் விரும்பாத இராசீவ், எப்படி ஈழத்தமிழர்களுக்கு எல்லா உரிமைகளையும் அவர்களுக்குப் பெற்றுத் தருவார்?

இராசீவின் இந்த முரண்பட்ட இரண்டகப் போக்கிற்கு ஈழத்தமிழினம் இன்னும் எத்தனைக் காலம் பலியாவது? 0

தமிழ் ஈழ விடுதலைப் பொதுக்கூட்டம்!

கடந்த 15-7-1985 அன்று மாலை, 7 மணி அளவில், வடவார்க்காடு சாத்தனூரில் திருக்குறள் பேரவைச் சார்பில், தமிழ் ஈழ விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. மொ. தாமோதரனார், க.மு., கல். இ., தலைமை தாங்கினார். புலவர். மு. ஆறுமுகம், க.மு. அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழீழச் சிக்கல்களை விளக்கித் திருவாளர்கள்: கணபதி, தா. இராமசாமி, மு. உலக முதல்வன், சீ. இராமு, புலவர். இரா. பெருமாள், புலவர் மு. ஆறுமுகம், தேவேந்திரன், புலவர் பழனி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். இறுதியில், தமிழீழ வரலாற்றையும், அங்கு நிகழ்ந்து வரும் போராட்டங்களையும், அப்போராட்டங்களை நடத்த வேண்டியதன் தேவைகளையும், அவற்றை நிகழ்த்தி வரும் விடுதலைப் போராளிகளைப்பற்றியும், உலகில் தமிழனுக்கென்று ஒரு நாடு அமையவேண்டியதன் இன்றியமையாமையையும் விளக்கி விரிவான ஒரு கருத்துரையைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஏறத்தாழ 2-30 மணி நேரம் பேசினார். கூட்டம், இரவு 12-15 மணி அளவில் முடிவுற்றது. இடையிடை சிறு சிறு தூறல் இருந்தும், மக்கள் கலையாமல் இருந்து, ஆர்வமுடன் நிகழ்ச்சியில் பங்கு கொண்டது குறிப்பிடத் தக்கது. இறுதியில் புலவர். மு. ஆறுமுகம் நன்றிகூற, இரவு 12-30 மணி அளவில் கூட்டம் நிறைவுற்றது. வெளியூர் அன்பர்கள் அனைவர்க்கும் நிகழ்ச்சி அமைப்பாளர் புலவர். திரு. மு. ஆறுமுகம் அவர்கள் உணவு வழங்கினார்.

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன

1. பாவேந்தர் பாரதிதாசன் 14—00
2. இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு? 1—00
3. வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு) 1—50
4. சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும் 0—50
5. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் 2—25
6. தன்னுணர்வு 1—50
7. இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் 1—50

தொடர்பு கொள்ள:

மே/பா, தென்மொழி, சென்னை-5.

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 62] பதிவு எண் TN/MS (C) 657

அனுப்புதல்: தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி சென்னை—5

பெறுநர். திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்: தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.